


கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (24.10.2026), மாலை, சென்னை – வானகரத்தில் நடைபெற்ற, திரைப்பட நடிகர் பிரேம் குமார் – திருமதி ஹம்சத்வனி ஆகியோரின் மகன் சஞ்ஜீத் சுந்தரம் – ஸ்வேதா ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். முன்னாள் அமைச்சர்கள் கே.என்.நேரு எம்.எல்.ஏ., பெஞ்சமின், கழகத் தலைமை நிலையச் செயலாளர் பூச்சிமுருகன், முன்னாள் எம்.எல்.ஏ. காரம்பாக்கம் கணபதி உள்ளிட்ட முன்னணியினர் உடன் உள்ளனர்.



கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (24.10.2026), மாலை சென்னை – மூலக்கடையில் நடைபெற்ற, சென்னை மாநகர் போக்குவரத்துக் கழக ஊழியர் முன்னேற்றச் சங்கப் பொதுச் செயலாளர், சென்னை வடக்கு மாவட்டம், பெரம்பூர் தெற்குப் பகுதி, 44வது வட்டக் கழகச் செயலாளர் த. ஆறுமுகத்தின் மகள் ஆ.தமிழ்பொன்னி – கு.விக்னேஷ் ஆகியோரின் திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்தினார். மாவட்டச் செயலாளர்கள் ஆர்.டி.சேகர், மாதவரம் எஸ்.சுதர்சனம், கழகத் தலைமை நிலையச் செயலாளர் பூச்சி முருகன், பி.டி.சி.செல்வராஜ், பி.டி.சி.பாலு உள்ளிட்ட முன்னணியினர் உடன் உள்ளார்கள்.



முன்னாள் அமைச்சரும், விருதுநகர் தெற்கு மாவட்டச் செயலாளருமான கே.கே.எஸ்.எஸ்.ஆர்.இராமச்சந்திரன் எம்.எல்.ஏ., – திருமதி ஆர்.ஆதிலட்சுமி ஆகியோரின் மகள் வழிப் பேரனும் – டாக்டர் பா.அருண் குமார் – உமாமகேஸ்வரி ஆகியோரின் புதல்வருமான ஏ. வைஷ்ணவ் – திருநெல்வேலி சரவணன் – திருமதி விஜயசங்கரி ஆகியோரின் புதல்வியான எஸ்.விகாஷ்னி ஆகியோரின் திருமண வரவேற்பு விழா நேற்று முன்தினம் மாலை சென்னை – திருவான்மியூரில் அமைந்துள்ள இராமச்சந்திரா கன்வென்ஷன் ஹாலில் நடைபெற்றது. இவ்விழாவில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொண்டு மணமக்களை வாழத்தினார். முன்னாள் அமைச்சர்கள் தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ., அர.சக்கரபாணி எம்.எல்.ஏ., பி.மூர்த்தி, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டாக்டர் கலாநிதி வீராசாமி, தங்கதமிழ்ச்செல்வன் உள்ளிட்ட கழக முன்னணியினர் உடன் உள்ளார்கள்.



சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் மாலை, சென்னை – நீலாங்கரையில் நடைபெற்ற – முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளரும், முன்னாள் ஒன்றியப் பெருந்தலைவருமான (நினைவில் வாழும்) கே.எஸ்.இராமச்சந்திரன் அவர்கள் இல்லத் திருமண வரவேற்பு விழாவில் கலந்து கொண்டு மணமக்கள் சா.விக்னேஷ் – ம.ஜீவிதா ஆகியோரை வாழ்த்தினார். காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், கழக இளைஞரணி மாநில துணைச் செயலாளர் அப்துல் மாலிக், இலத்தூர் வடக்கு ஒன்றியச் செயலாளர் கே.எஸ்.ஆர்.கார்த்திகேயன், ஒன்றியப் பெருந்தலைவர் சாந்தி ராமச்சந்திரன், கே.எஸ்.ஆர்.கீர்த்திதரன் உள்ளிட்ட முன்னணியினர் உடன் உள்ளார்கள்.

கட்டணமில்லா அரிசியை 'பாலிஷ்' போட்டு – 30 ரூபாய்க்கு விற்று கொள்ளை அடிப்பதுதான் 'டம்மி' CM சொன்ன மாற்றமா?

சன்ன ரக பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்ய இந்தக் கோமாளி அரசு எப்போது டெண்டர் விட்டது?

சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கேள்வி!

சென்னை, அக். 26- சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று விடுத்த வலைதளப் பதிவொன்றில், "மக்களுக்கான கட்டணமில்லா அரிசியை 'பாலிஷ்' போட்டு 30 ரூபாய்க்கு விற்றுக் கொள்ளை அடிப்பதுதான் டம்மி 'CM சொன்ன மாற்றமா?" என்றும் - "சன்னரக பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்ய இந்தக் கோமாளி அரசு எப்போது டெண்டர் விட்டது?" என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

சட்டமன்ற எதிர் கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ட்விட்டர் பதிவு வருமாறு:-

மக்களுக்கான கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு 30 ரூபாய்க்கு விற்று கொள்ளை அடிப்பது தான்



Dummy CM சொன்ன மாற்றமா?

அரிசி விலையேற்றத்துக்கான தீர்வாக, கூட்டுறவு அங்காடிகளில் சன்னரகப் பொன்னி அரிசியை ரூ.30க்கு வாங்கலாம் என்று இந்த அரசு அறிவித்தது.

அதை நம்பி ரேஷன் கடைகளுக்குப் போனால், வழக்கமாக வழங்கப்படும் கட்டணமில்லா அரிசியை பாலிஷ் போட்டு, சன்னரகப் பொன்னி அரிசி என்று விற்கப்படுவதாக தமிழ் நாடெங்கும் பொதுமக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். பல இடங்களில் அரிசியை திருப்பிக்கொடுத்தும் வருகின்றனர்.

மக்கள் முற்றுகையால் ஓட்டம் பிடித்த த.வெ.க. எம்.எல்.ஏ.!

கம்பத்தில் பாலிஷ் செய்யப்பட்ட அரிசி வழங்கப்பட்டதால், த.வெ.க எம்.எல்.ஏ.வை முற்றுகையிட்டு பொதுமக்கள் கேள்வி எழுப்பிய போது, கரூர் பாணியில் ஓட்டமெடுத்து இருக்கிறார் அந்த MLA.

தமிழ்நாட்டில் 2 கோடியே 28 லட்சம் குடும்ப அட்டைகள் இருக்கும் போது, வெறும் 250 இடங்களில் அதுவும் குடும்பத்துக்கு தலா 5 கிலோ மட்டும் என, 'சன்ன ரகப் பொன்னி' என்ற பெயரில், பாலிஷ் செய்யப்பட்ட அரிசி வழங்கப்படுவதாக தொடர்ந்து புகார்கள் வருகின்றன.

சிறப்பு விநியோகத் திட்டம் கண்டவர் - முத்தமிழறிஞர் கலைஞர்!

2007ல் அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்ந்த போது, அன்றைய முதல்வராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், சிறப்பு பொதுவிநியோகத் திட்டத்தை அறிவித்து, வெளிப்படையான முறையில் டெண்டர் விட்டு, பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, உள்ளிட்ட பொருட்களை மானிய விலையில் மக்களுக்கு வழங்கினார்கள்.

> **இந்தக் கோமாளி அரசு, சன்ன ரகப் பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு எப்போது டெண்டர் விட்டது? டெண்டர் எடுத்த நிறுவனங்கள் எவை? என்ன விலைக்கு அவர்கள் அரசுக்கு பொன்னி அரிசியை வழங்கினார்கள்? த.வெ.க அரசு பொதுமக்களுக்கு எவ்வளவு மானிய விலையில் அரிசியை வழங்குகிறது?**

ஆனால், இந்தக் கோமாளி அரசு, சன்ன ரகப் பொன்னி அரிசியைக் கொள்முதல் செய்வதற்கு எப்போது டெண்டர் விட்டது? டெண்டர் எடுத்த நிறுவனங்கள் எவை?

என்ன விலைக்கு அவர்கள் அரசுக்கு பொன்னி அரிசியை வழங்கினார்கள்? த.வெ.க அரசு பொதுமக்களுக்கு எவ்வளவு மானிய விலையில் அரிசியை வழங்குகிறது? இது குறித்து பாலிஷ் எதுவும் போடாமல் வெளிப்படைத்தன்மையுடன் இந்த ஆட்சியாளர்கள் பதிலளிக்க வேண்டும்.

இவ்வாறு அப்பதிவில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் மதுரை வருகை!

மதுரை வடக்கு மாவட்டக் கழகச் செயல்வீரர்கள் கூட்டம்!

மாவட்டக் கழகச் செயலாளர் – முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!

மதுரை, அக்.26- வருகிற 30ஆம் தேதி தேவர் திருமகனார் குருபூஜை மற்றும் மருது சகோதர்கள் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதற்காக கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 29 ம் தேதி மதுரை வருகை குறித்து ஆலோசிக்க மதுரை வடக்கு மாவட்ட திமுக செயல்வீரர்கள் கூட்டம் வருகிற 27 ம் தேதி நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை வருமாறு:-



வருகிற 30ஆம் தேதி தேவர் திருமகனார் குருபூஜை மற்றும் மருது சகோதர்கள் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்துவதற்காக 29 ம் தேதி மாலை மதுரைக்கு விமானம் மூலம் வருகை தரும் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை வரவேற்பது தொடர்பாக மதுரை வடக்கு மாவட்ட திமுக செயல்வீரர்கள் கூட்டம் அவைத்தலைவர் எம்ஆர்எம்.பாலசுப்ரமணியன் தலைமையில் 27.10.2026 ஆம் தேதி காலை 10 மணிக்கு திருப்பாலையாதவா மகளிர் கல்லூரி அருகில் அமைந்துள்ள குறிஞ்சி திருமண மண்டபத்தில் நடைபெற உள்ளது.

அதுசமயம் மதுரை வடக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக முன்னோடிகள், கிளைச் செயலாளர்கள், நிர்வாகிகள் உள்ளிட்ட அனைவரும் பங்கேற்ற வேண்டுமாய் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் பி.மூர்த்தி தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

விமானத்திற்கான எரிபொருள் வரியைக் குறைத்து

த.வெ.க. அரசு கார்ப்பரேட் அரசாக செயல்பட்டு வருகிறது!

முன்னாள் அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா பேட்டி!

சிவகங்கை அக். 26.

சிவகங்கை மாவட்டம் திருப்பத்தூரில் மாமன்னர் மருதுபாண்டியர்களின் 225வது ஆண்டு குருபூஜை விழாவில் பங்கேற்ற முன்னாள் தொழில் துறை அமைச்சர் தகவல் தொழில் நுட்ப அணி அமைப்பாளர் டி.ஆர்.பி.ராஜா செய்தியாளர்களிடம் கூறியதாவது.

முதல்வராக விஜய் பொறுப்பேற்ற நாளிலிருந்து கொலை, கொள்ளை, பாலியல் குற்றங்கள், வன்முறை சம்பவங்கள் தினசரி நடைபெற்று வருகின்றது. கடந்த ஐந்து மாத ஆட்சியில் வன்முறை சம்பவங்கள் நடைபெறாத நாட்களே இல்லை.



விலைவாசி கடுமையாக உயர்ந்துள்ளது .ஒரு மாதத்தில் அரிசி விலை ரூபாய் 40 உயர்ந்துள்ளது.பாமாயில், பருப்பு போன்ற மற்ற பொருட்கள் விலைகள் அதிக அளவில் உயர்ந்துள்ளது. இதனால் ஏழை, எளிய, சாதாரண சாமான்ய நடுத்தர மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளார் கள். ஆட்டோ ஓட்டுனர்கள் தொழிலாளர்கள் மிகவும் வருத்தமாக உள்ளார்கள் .இதைப் பற்றி எல்லாம் முதல்வர் விஜய்க்கு கவலை இல்லை. மாறாக அவர் விமானத் திற்கான எரிபொருளுக்கான வரியை குறைத்து உள்ளார். கார்ப்பரேட் அரசாக த.வெ.க. அரசு செயல்பட்டு வருகிறது.

கடந்த சில நாட்களுக்கு முன் சிவகங்கை பஸ் நிலையம் முன்பாக இந்த அரசிடம் விதவைப் பெண்மணி உதவி கேட்டு தனது குழந்தையுடன் ரோட்டில் புரண்டு படுத்து அழுதது மிகவும் பரிதாபமாக நெஞ்சை உருக்கும் வகையில் இருந்தது. இத்தகைய சம்பவம் எங்கும், எப்பொழுதும் நடைபெற்றதில்லை.

இதையெல்லாம் முதல்வர் விஜய் அவர்கள் கண்டு கொள்ளவே இல்லை.

இந்த அரசு கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்பட்டு வருகிறது. விஜயை நம்பி வாக்களித்த மக்கள் ஏமாற்றத் துடன் உள்ளார்கள்.

இவ்வாறு டி.ஆர்.பி. ராஜா கூறினார்.